**பண்டாரகம பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பண்டாரகம பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பண்டாரகம பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2017 இன் 3 ஆவது அத்தியாயத்தில் காசுப் பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய திட்டமுறைமைக்கு இணங்க மீளாய்வாண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படாதிருந்தமை பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | | |

| | | |
|---|---|---|
| • ஆண்டிற்கான மிகை ரூபா 41,933,126 ஆக இருந்த போதும், செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் ஆண்டின் மிகை ரூபா 243,437,444 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது சரியாக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரித்து சமர்ப்பிக்கப்படும். | ஆண்டின் மிகை சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |
| • ஆண்டில் நிலையான வைப்புக்களில் காசு மீளப் பெறல் ரூபா 7,096,030 முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாகவும் புதிய நிலையான வைப்பு முதலீடு ரூபா 5,000,000 முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாகவும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டின் போது சரியாக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரித்து சமர்ப்பிக்கப்படும். | முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல் சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |
| • மூலதன செலவின மானிய பெறுமதி ரூபா 84,885,223 ஆக இருந்த போதிலும் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து கிடைத்தவை காசுப்பாய்ச்சலின் கீழ் அது ரூபா 14,391,280 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது சரியாக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரித்து சமர்ப்பிக்கப்படும். | மூலதன செலவின மானியங்கள் சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |
| • ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் பெறுமதி ரூபா 11,574,523 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டின் போது சரியாக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரித்து சமர்ப்பிக்கப்படும். | காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |
| • ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் பெறுமதி ரூபா 12,040,678 ஆக இருந்த போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 466,155 ஆக அதாவது ரூபா 11,574,523 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது சரியாக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரித்து சமர்ப்பிக்கப்படும். | காசு மற்றும் காசுக்கு சமமாவைகள் சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2017 இன் பந்தி இலக்கம் 3.7 இன் பிரகாரம் நிறுவனமொன்று | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சமர்ப்பிக்கப்படும். | பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | தயாரித்த பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் அந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அந்த நியமத்தின் 3.9 ஆம் பந்தியின் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் ஒப்பீடு செய்யக்கூடிய வகையில் தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டு அந்த பெறுமதிகளுக்கிடையே ஏதாவது பொருண்மையான வேறுபாடுகள் உள்ளதாயின் அவற்றுக்கான காரணங்களும் வெளிப்படுத்தப்படல் வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்காக நிதிக் கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் ஒப்பீட்டு ரீதியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | | வேண்டும். |
| (இ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 52 மற்றும் 53 ஆம் பந்திகளின் பிரகாரம் மீள்மதிப்பீடாக சொத்துக்கள் வகுப்பின் இறுதி பெறுமதி அதிகரிக்கும் போது அந்த அதிகரிப்பு நேரடியாக மீள்மதிப்பீட்டு மிகைக்கு செலவு வைக்கப்பட வேண்டியதுடன் மீள்மதிப்பீட்டின் விளைவாக சொத்துக்களின் வகுப்பின் இழிவுப்பெறுமதி குறைவொன்று ஏற்படுமிடத்து அந்த குறைவு மிகையின் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்படல் வேண்டும். எனினும், 2020 சனவரி 01 இல் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட விளைவுகள் மேற்கூறப்பட்ட பிரகாரம் சீராக்கப்படாமல் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்புக் கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சமர்ப்பிக்கப்படும். | பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திரண்ட நிதியக் கணக்கில் ஆண்டின் மிகையான ரூபா 41,933,126 தொகையை சீராக்குவதற்குப் பதிலாக ஆண்டின் விரிவான வருமானமான ரூபா 126,818,350 சீராக்கப்பட்டமையால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிதியம் ரூபா 84,885,223 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் ஆண்டின் உரிமை மூலதனத்திற்கான தாக்கம் ஏற்படுத்தாத ரூபா 346,905,155 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி உள்ளடக்கப்பட்டமையின் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த உரிமை மூலதனம் அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் மீள்மதிப்பீட்டின் மூலம் புதிய மீதி இனங்காணப்பட்டமையால் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் நிலையான சொத்தாக சீராக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) | ஆண்டின் திரண்ட மிகை ரூபா 52,253,165 தொகை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா 285,370,570 ஆக அதாவது ரூபா 233,117,405 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | ஆண்டின் உரிமை மூலதனத்திற்கான உரித்து இருப்பு மற்றும் ஒதுக்கீட்டு மீதி ரூபா 668,297 தொகை மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 233,117,327 தொகை என்பன 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டில் நன்கொடையாக கிடைத்த ரூபா 668,297 பெறுமதியான நிலையான சொத்துக்கள் உரிய சொத்துக்கள் கணக்கில் சரியாக சீராக்கப்பட்டிருந்த போதிலும் அந்த | 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | நன்கொடை பெறுமதி வருமானமொன்றாக கணக்கீடு செய்யப்படாமல் ஒதுக்க கணக்கில் செலவு வைக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் வருமானம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | ரூபா 7,980,490 பெறுமதியான பயன்பாட்டுச் சேவைகள் கணக்ஷகினதும், மாகாண சபை கடன் கணக்கினதும் ரூபா 193,729 பெறுமதியான ஊழியர் பிணை வைப்பு மற்றும் ஊழியர் பிணை முதலீட்டு கணக்கும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்படாமையின் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள் சரியாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | - மேற்படி - |
| (எ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக இருப்பு கணக்கீடு செய்வதற்கு பதிலாக ரூபா 2,633,644 தொகையான இருப்புக்கள் புத்தக மீதியில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆயுர்வேத பொருள் இருப்பு பதிவேட்டுடன் பரீட்சித்து அந்த இருப்பு சமமாக இருந்தமையால் உரிய பதிவேடுகளில் கையொப்பம் இடப்பட்டிருந்தது. | பௌதீக இருப்பு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதிக்கும், பதிவேடுகளின் பிரகாரமான பெறுமதிக்கும் இடையே ரூபா 211,744 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 381,061,277 கூட்டுத்தொகையான 07 கணக்கு விடயங்களுக்குரிய கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்து வதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 41,933,126 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,632,274 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பண்டாரகம பிரதேச சபையிலிருந்து தனியான ஒரு அலகாக 2018 பெப்ரவரி 11 ஆந் திகதி மில்லனிய பிரதேச சபை தாபிக்கப்பட்டிருந்ததுடன் சபைக்குச் சொந்தமான முன்னாள் காணப்பட்ட சொத்துக்கள் இரண்டு சபைகளுக்கிடையே பகிர்ந்தளித்தமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) மில்லனிய பிரதேச சபையினால் பயன்படுத்தப்படுகின்ற உரித்துறுதிகளின் பெறுமதி ரூபா 25,595,177 ஆன 100 காணிக் கூறுகள் பண்டாரகம பிரதேச சபையினால் முறையாக மில்லனிய பிரதேச சபைக்கு 2021 யூலை 20 ஆந் திகதி வரையிலும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பட்டோலைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. | சொத்துக்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) சபை தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்ட மில்லனிய பிரதேச சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 13 | உரிய பட்டோலைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. | சொத்துக்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடங்கள் பண்டாரகம பிரதேச சபையினால் முறையாக கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் 2019 செப்தெம்பர் 20 ஆந் திகதி சொத்துக்கள் பண்டாரகம மற்றும் மில்லனிய பிரதேச சபைகளுக்கிடையே 58 சதவீதம் 42 சதவீத விகிதத்தில் பகிர்ந்தளிப்பதற்கு இனங்காணப்பட்டிருந்த போதிலும், பண்டாரகம பிரதேச சபையினால் 2021 ஏப்ரல் 28 ஆந் திகதிய பொதுச்சபைக் கூட்டத்தின் போது இனங்காதிருந்தமையால் சபை தாபிக்கப்பட்டு 03 வருடங்களும் 05 மாத காலமும் கடந்திருந்த போதிலும் சொத்துக்களை பகிர்ந்தளித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2021 ஏப்ரல் 28 இல் பொதுச் சபை கூட்டத்தின் போது இது தொடர்பாக இணங்காதிருந்தமையால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | சொத்துக்கள் பகிர்ந்தளித்தல் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2021 பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் நிதிக் கூற்றுக்கள் 2021 மார்ச் 30 ஆந் திகதி தாமதமாகி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | மில்லனிய மற்றும் பண்டாரகம பிரதேச சபைகளுக்கிடையே சொத்துக்கள் பகிர்ந்தளிக்கப்படாமையின் காரணமாக இறுதிக் கணக்குகளை குறித்துரைத்த திகதியில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுடன் கலந்துரையாடி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |